## 9.2 Feminism

❖ Feminism is the radical notion that women are people.

❖ A feminist is anyone who recognizes the equality and full humanity of women and men.

***- Cheris Kramarae***

https://www.tnpscthervuthunaivan.com/

Feminism refers to the movements and ideologies that strive to promote empowerment of women so that they achieve equality with men. Feminist schools of thought emerged on the horizon of Modern Political Theory from the last decades of the 19th century. It was propelled by scientific realisation about the innate capability and equality of women with men

There are different feminist schools of thought that can be broadly categorized as;

A. Liberal Feminism
B. Marxist Feminism
C. Radical Feminism
D. Eco Feminism
E. Post-Colonial Feminism

### A. Liberal Feminism

The feminist movement, in its infant stage in the late 19th century, advocated equal political rights for women. It believed that the subordination of women in society could be rectified with electoral enfranchisement of women and endowment of other political and economic rights. The State was considered to be a gender neutral institution. Therefore granting of voting rights to women will culminate in the fruition of women development. The greatest feat of liberal feminism lies in winning voting rights to women in the democratic western countries.

https://www.tnpscthervuthunaivan.com/

## 9.2 பெண்ணியம்




பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடக்கூடிய இயக்கங்களுக்கும் கொள்கைக்கும் பெண்ணியம் என்பது பெயர் ஆகும். ஆண், பெண் சமத்துவத்தை பெண்ணியம் ஆதரிக்கின்றது. நவீன அரசியல் கோட்பாட்டியலில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெண்ணியம் தோன்றியது. அறிவியல் ரீதியாக ஆணும் பெண்ணும் சமம் என்று நிரூபிக்கப்பட்டதால் பெண்ணியம் தோன்றியது.

பல்வேறு பெண்ணியக் கொள்கைப் பள்ளிகள், அரசியல் அறிவியலில் காணப்படுகின்றன.

1. தாராளவாதப் பெண்ணியம்
2. மார்க்சியவாதப் பெண்ணியம்
3. தீவிரப் பெண்ணியம்
4. சுற்றுச்சூழல் பெண்ணியம்
5. பின் காலனியப் பெண்ணியம்

### 1. தாராளவாதப் பெண்ணியம்

முதல் கட்ட பெண்ணியமானது 19-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. ஆண்களுக்கு நிகரான அரசியல் உரிமைகளைப் பெண்களுக்கும் கோரியது. பெண்கள் அடிமையாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டால் பெண்களை ஆண்களுக்கு நிகராக முன்னேற்ற முடியும். அரசு ஆணையும், பெண்ணையும் சமமாக பார்க்கும் ஒரு கருவியாகும். இயற்கையாகவே பெண்களுக்கு எதிரானது அரசு கிடையாது. தாராளவாதப் பெண்ணியம் மேற்கத்திய மக்களாட்சி நாடுகளில் பெண்களுக்கு சமமான வாக்குரிமை பெற்றுத்தந்து மிகப்பெரிய சாதனை செய்தது.

https://www.tnpscthervuthunaivan.com/

## B. Marxist Feminism

It placed gender inequality and exploitation in the origin of private property from the second stage of human history called Ancient Slave Society. Friedrich Engels, a close associate of Karl Marx, wrote the book "The Origins of The Family, Private Property and the State". He argued that subordination of women emerged with the rise of private property as men controlled the property and used it to establish their domination over women. The struggle for women liberation should take place simultaneously with the struggle for liberation of the working class. Marxist revolution will lead to the destruction of capitalism and the establishment of communism where there will be no private property. There will be equality among not only men but also between men and women

https://www.tnpscthervuthunaivan.com/

## C. Radical Feminism

There are no innate differences between men and women and women came to be subjugated deliberately for the purpose of exploitation, is the ideological crux of Radical Feminism.

Simone de Beauvoir, the famous radical feminist and author of the work "The Second Sex", asserted that "A woman is not born but made". Both woman and man are endowed with same capacities when they are born. Male-dominated society and culture known as patriarchy creates through indoctrination the inequality between them. The differences in gender are created artificially and unjustly. We can understand this assertion when we note the enormous differences in the status and position accorded to women among the cultures of the world.

https://www.tnpscthervuthunaivan.com/

### 2. மார்க்சியவாதப் பெண்ணியம்

மனிதர்களிடையே சொத்துரிமை தோன்றியதால் தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டனர். மனித வரலாற்றின் இரண்டாவது காலகட்டமாகிய பண்டைய கால அடிமை முறையில் தான் தனிசொத்துகள் தோன்றின. காரல் மார்க்சின் நண்பரான பிரெட்ரிக் ஏங்கல்ஸ் "குடும்பம், தனி சொத்துகள் மற்றும் அரசின் தோற்றம்" என்ற நூலை எழுதினார். தனிசொத்துகள் தோன்றிய பிறகு ஆண்கள் ஆதிக்கம் செலுத்தினர், பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர் என்று அவர் கூறினார். பொதுவுடைமைவாத புரட்சி வர வேண்டும், புரட்சி மூலம் தொழிலாளர்களும் விடுதலை பெறுவார்கள், பெண் இனமும் விடுதலை பெறும், ஆண்களிடம் தனிசொத்துகள் இருக்காது, செல்வங்கள் எல்லாம் எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் என்று கூறினார்.

### 3. தீவிரப் பெண்ணியம்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் எந்தவித ஏற்றத்தாழ்வும் கிடையாது. பெண்கள் ஆண்களால் சுரண்டப்படுகிறார்கள், ஏமாற்றப்படுகிறார்கள் என்று தீவிரப் பெண்ணியம் கூறுகிறது.

சைமன் டி பீவர் "இரண்டாவது பாலினம்" என்ற நூலை எழுதினார். "பெண்கள் பிறப்பது கிடையாது, உருவாக்கப்படுகிறார்கள்" என்ற கருத்தை இவர் வலியுறுத்தனார். பிறக்கும் பொழுது ஆணும், பெண்ணும் சமமான திறமைகளை பெற்றிருக்கின்றனர். ஆணாதிக்க சமுதாயமும், கலாச்சாரமும் பிரச்சாரங்கள் மூலம் பெண்களை அடிமைப்படுத்துகிறது.

ஆணாதிக்கம் இயற்கைக்கும், நீதிக்கும் எதிராகப் பெண்களை அடிமைப்படுத்துகிறது. உலக முழுவதும் பல்வேறு கலாச்சாரங்கள் பெண்களுக்குப் பலவகையான மதிப்பை வழங்குவது இக்கருத்துக்கு சாட்சி ஆகும்.

https://www.tnpscthervuthunaivan.com/

Carole Hanisch, a famous Radical Feminist, brought out the most important slogan of Radical Feminism - Personal is Political - to reveal patriarchal domination over women. The liberal politics divides the activities of humankind into personal and public domains. The personal domain is considered to be a sphere of personal life where family operates. It is believed that there is no scope for conflict and domination in this sphere and only love, affection and empathy are relevant. Women live in the personal sphere and therefore there is no need for political rights, power and authority for women.

But the public domain is a sphere of struggle, competition and therefore politics. This domain is dominated exclusively by men. Therefore, men alone participate in politics and possess political power. https://www.tnpscthervuthunaivan.com/

Radical Feminism repudiates the above liberal exposition and asserts that private and personal domain is also subject to politics. The relationship between man and women in personal domain is not always characterised by the considerations of love and affection. Even here struggle, competition and domination operate. For example the relations between husband and wife and a brother and sister are not always friendly and affectionate.

Struggle and competition can also be found in them. Therefore, we should speak about politics, women rights, gender equality in personal domain too. Radical Feminism argues for a revolutionary re-ordering of society and politics to implant gender equality in personal and public domains.

### D. Eco Feminism

Eco Feminism provides a feminist interpretation of nature. The two ideologies of Feminism and Environmentalism are fused in Eco Feminism. It argues that patriarchy is the root cause of environmental degradation and women exploitation. The important architects of Eco Feminism are Francoise D'Eaubonne, Rosemary Ruether, Ynestra King and Vandana Shiva.

கரோல் ஹானிஸ்க் என்ற புகழ்பெற்ற பெண்ணியவாதி "தனிப்பட்ட வாழ்விலும் அரசியல்" (The Personal is Political) என்ற முழக்கத்தின் மூலம். ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துவதை விளக்கினார். மனிதர்களின் வாழ்க்கையை இரண்டு தளங்களில் ஆண்கள் பிரித்திருக்கிறார்கள். தனிவாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கை. தனிவாழ்க்கை குடும்பம் சம்பந்தப்பட்டதாகும். இங்கு அன்பும், பாசமும் நிறைந்திருக்கும் போட்டி, பொறாமை இருக்காது.

குடும்பத் தளத்தில் பெண்கள் வசிக்கிறார்கள், இங்கு அரசியல் கிடையாது, மாறாக பொது வாழ்க்கையில் போட்டி, பொறாமை நிறைந்திருக்கும். ஆண்கள் இதில் பங்கேற்கிறார்கள். அரசியல் மற்றும் அதிகாரப் போட்டியில் ஆண்கள் ஈடுபடுகின்றனர். இக்கருத்துக்களை கரோல் ஹானிஸ்க் நிராகரிக்கின்றார். பொது வாழ்வில் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்விலும் போட்டி, பொறாமைகள் உள்ளன. கணவன், மனைவி உறவுகளில் கூட அதிகாரம், போட்டி, இருக்கலாம். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் அரசியல், அதிகாரத்தை பற்றி பேச வேண்டும். ஆண்களுக்கு இணையான அதிகாரத்தை பெண்கள் பெற வேண்டும். ஆகவே தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் உள்ளது என்று அவர் கூறினர்.

### 4. சுற்றுச்சூழல் பெண்ணியம்

இயற்கையையும், பெண்களையும் ஆணாதிக்கும் ஏமாற்றுகிறது. சுற்றுச் சூழல் பெண்ணியத்தின் முக்கிய சிந்தனை சிற்ப்பிகள் பிரான்கோஸ் டி எபோன்னே, ரோஸ்மேரி ருதர், நேஸ்ரா கிங் மற்றும் வந்தனா சிவா ஆவார்கள்

https://www.tnpscthervuthunaivan.com/

There are two schools of thought in Eco Feminism. They are Radical Feminism and Cultural Feminism. Radical Feminism asserts that patriarchy or male-dominated system subjugates and degrades both environment and women. Male domination of society must be eliminated to realise the twin objectives of environmental preservation and women empowerment.

The other school, Cultural Feminism argues that women are closer to nature as both are food providers and play indispensable role in biological reproduction. The environmental degeneration affects women more than men. The division of work between the two genders leaves women more disadvantaged in the age of environmental crisis. They suffer more as in male dominant societies they are given the responsibilities directly linked with nature.

### E. Post-Colonial Feminism

Post-Colonial Feminism arose as an ideology and movement in the 1980s in the countries of Asia and Africa that were formerly enslaved in colonialism. Audre Lorde contributed to the emergence of Post-Colonial Feminism in one masterpiece essay "The Master's Tools Will Never Dismantle the Master's House". Gyatri Spivak, Chandra Talpade Mohanty and Ethel Crowley are important Post-Colonial Feminists.

Audre Lorde *said, "To imply, however, that all women suffer the same oppression simply because we are women is to lose sight of the many varied tools of patriarchy. It is to ignore how those tools are used by women without awareness against each other... As an African-American woman in White patriarchy, I am used to having my archetypal experience distorted and trivialised."*

https://www.tnpscthervuthunaivan.com/

இரண்டு வகையான சுற்றுசூழல் பெண்ணிய கருத்துகள் உள்ளன. ஒன்று தீவிரப் பெண்ணியம், இரண்டாவது, கலாச்சாரப் பெண்ணியம். தீவிரப் பெண்ணியம் ஆணாதிக்கத்தை அழித்தால் தான் இயற்கையையும், பெண்களையும் காப்பாற்ற முடியும் என்று கூறுகிறது.

கலாச்சாரப் பெண்ணியம் உணவு தயாரிப்பதிலும், இனத்தைப் பெருக்குவதிலும் பெண்கள் இயற்கைக்கு நெருக்கமானவர்கள் என்று கூறுகிறது. இயற்கை சீரழிவால் ஆண்களை விடப் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மனித வாழ்க்கையில் வேலைப் பங்கீடு முறையால் இயற்கை சீரழியும் பொழுது பெண்களுக்குத்தான் அதிக இன்னல்கள் தோன்றுகின்றன. இயற்கையையும் பெண்களையும் பாதுகாக்க வேண்டும்.

https://www.tnpscthervuthunaivan.com/

### 5. பின் காலனியப் பெண்ணியம்

பின் காலனி ஆதிக்கப் பெண்ணியம் 1980 களில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் இயக்கமாகவும், தத்துவமாகவும் தோன்றியது. ஆட்ரி லார்டு என்ற பெண்ணியவாதி பின் காலனி ஆதிக்கப் பெண்ணியத்தை தோற்றுவித்தார். "நிபுணரின் கருவிகள் நிபுணரின் வீட்டை ஒருபோதும் உடைக்காது" (The Mater's Tools Will Never Dismantle the Master's House) என்ற முக்கிய நூலை எழுதினார். யாத்திரி ஸ்பிவாக், சந்தரா தல்பதே மொகந்தி, எதல் க்ராலே ஆகியோர் பின் காலனி ஆதிக்கப் பெண்ணிய வாதிகள் ஆவர்.

ஆட்ரிலார்டு கூறினார். " எல்லா பெண்களும் ஒரே மாதிரியான அடக்குமுறையால் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறக்கூடாது. அவ்வாறு நினைத்தால் ஆணாதிக்கத்தின் பல வகையான தன்மைகளை நாம் பார்க்கத் தவறிவிடுவோம். எவ்வாறு ஆணாதிக்க கருவிகள் பயன்படுத்தப்படுகிறது என்ற விழிப்புணர்வு இல்லாமல் பெண்கள் இருப்பார்கள். வெள்ளைக்கார ஆணாதிக்கத்தில் ஆப்பிரிக்க, அமெரிக்கப் பெண்ணாக நான் சந்தித்த சோதனைகள், அனுபவங்கள் தவறாக சித்தரிக்கப்படுகின்றன, சிறுமைப்படுத்தப்படுகின்றன."

It revolts against the western feminist movements' attempts at universalizing their experience. Women do not constitute a single and homogenous category as they are differentiated by a host of factors like class, race, religion and country. The mainstream feminism suffers from several deficiencies when applied to non-western societies The Post-Colonial Feminism criticises the negative impact of western colonialism on the social economic and political universe of women in Asia and Africa, a realty that was ignored and never experienced by the mainstream feminist thought. They had experienced racism, slavery, forced migration and numerous other evils that make them different from the Western women.

It also condemns the projection of the western women as educated, politically- conscious, modern and empowered and non-western women as passive, powerless victims. Post-Colonial Feminism argues that women in these societies are victims of double colonisation represented by the exploitative forces of colonialism and patriarchy. Post-Colonial Feminism castigates the visible indifference of the mainstream post colonial political thought to the peculiar sufferings of the women in their societies and countries.

https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

பின் காலனி ஆதிக்கப் பெண்ணியம் மேற்கத்தியப் பெண்ணிய இயக்கங்களின் கருத்துகளை எதிர்க்கிறது. அவர்களின் அனுபவங்களை உலகம் முழுவதும் உள்ள பெண்களின் அனுபவம் என்று சித்தரிப்பதை இது எதிர்க்கிறது, உலகம் முழுவதும் பெண்கள்

https://www.tnpscthervuthunaivan.com/

ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வர்க்கம், இனம், மதம், நாடு போன்ற காரணிகளால் பெண்களிடையே பல வேறுபாடுகள் உள்ளன. மேற்கத்தியப் பெண்ணிய கருத்துக்கள் உலகின் பிற பகுதிகளில் உள்ள பெண்களின் நிலையைப் பிரதிபலிப்பதில்லை. ஆசிய, ஆப்பிரிக்க பெண்கள் மேற்கத்தியக் காலனி ஆதிக்கத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்கத்தியப் பெண்ணியவாதிகள் காலனி ஆதிக்கதாக்கத்தை சந்திக்காததால் அதனை கவனிக்க தவறுகிறார்கள். ஆப்பிரிக்கக் கண்டத்தின் பெண்கள் இனவாதம், அடிமை முறை, கட்டாய குடியேற்றம் போன்ற சோதனைகளைச் சந்தித்தனர். மேற்கத்தியப் பெண்கள் இவைகளைச் சந்திக்கவில்லை. மேற்கத்தியப் பெண்ணியவாதம் தங்களை படித்த, அரசியல் விழிப்புணர்வு உள்ள, நவீன சக்தி பெற்ற பெண்களாகக் கருதுகிறது. ஆசிய, ஆப்பிரிக்க பெண்களை அதிகாரமில்லாத, விழிப்புணர்வு இல்லாத, செயலற்ற இனமாகக் கருதுகிறது. இது ஒரு தவறான அணுகுமுறையாகும். ஆசிய, ஆப்பிரிக்கப் பெண்கள் காலனி ஆதிக்கம், ஆணாதிக்கம் என்ற இரண்டு சுரண்டல் சக்திகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பின் காலனியப் பெண்ணியம் மேற்கத்திய காலனி ஆதிக்கத்தை விமர்ச்சிக்கின்றது. மேலும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசியல் சிந்தனைகளில் பெண்கள் சந்திக்கும் தனிப்பட்ட பிரச்சனைகள் பற்றி கவனம் செலுத்துவது இல்லை என்றும், பின் காலனியப் பெண்ணியம் கூறுகிறது.